(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 376/2023 அ.சா.4

Name : திரு. பொம்மையன்

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026.

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்).**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது வைரவன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளில் 1வது எதிரி மற்றும் 2வது எதிரி ஆகியோர்களை தெரியும். எனது அண்ணன் மகன் பெரியகருப்பன் என்பவர் 1வது எதிரி கருங்காலக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொண்டிருப்பதாகவும், அவரை அழைத்து வர செல்கிறேன் என்று சொல்லிவிட்டு பெரியகருப்பன் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றார் என்றும், பிறகு 1வது எதிரி தனசேகரன் இருசக்கர வாகனத்தை ஓட்ட பெரியகருப்பன் எதிரி தனசேகரனுக்கு பின்பும், அதற்கு பின்னால் 3வது எதிரியும் உட்கார்ந்து இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்ததை நான் பார்த்தேன். என்னிடம் பெரியகருப்பன் சித்தப்பா நாங்கள் சரக்கு அடிக்க போகிறோம் என்று சொன்னான். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் வீட்டிற்கு சென்று அதிக நேரம் கழித்த பிறகு செல்வம் என்பவர் எனக்கு போன் செய்து மொல்லமலைக்கு பின்புறம் எனது அண்ணன் மகன் பெரியகருப்பன் இறந்துகிடப்பதாக செல்வம் என்பவர் போன் செய்து சொன்னார். நான் பதறி அடித்து ஓடிச்சென்றேன். அங்க ஒரே கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தபோது எனது

சகோதரர் அவரது மகனை மடியில் தூக்கி வைத்துக்கொண்டிருந்தார். எனக்கு வேறொன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :– இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

Sd/– பொம்மையன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.13 19:18:29 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.